## வேலூர் – காட்பாடி ரயில் நிலையம் மற்றும் சாலையின் இருமருங்கிலும்

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு சிறப்பான வரவேற்பு!

## வேலூரில் ரூ.198 கோடி மதிப்பிலான அரசு பல்நோக்கு மருத்துவமனையை முதல்வர் திறந்து வைத்தார்!

**வேலூர் , ஜீன் 26 -**

**வேலூர் மற்றும் திருப்பத்தூர் மாவட்டங்களில் கள ஆய்வு மேற்கொள்வதற்காக சென்னையிலிருந்து ரயில் மூலம் காட்பாடி சென்றடைந்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.**

**வேலூரில் ரூ.198 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அரசு பல்நோக்கு மருத்துவமனையை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று திறந்து வைத்தார்.**

வேலூர், திருப்பத்தூர் மாவட்டங்களில், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரு நாட்கள் (25, 26) கள ஆய்வு மேற்கொண்டு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்குகிறார்.

வேலூரில் 198 கோடி ரூபாய் மதிப்பில் புதிதாக கட்டப்பட்டுள்ள அரசு பல்நோக்கு மருத்துவமனையை திறந்து வைத்த முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள். சேர்க்காட்டில் கட்டப்பட்டுள்ள தாலுகா மருத்துவமனை, 9 ஆரம்ப சுகாதார நிலையங்களையும் காணொளி காட்சி மூலம் திறந்து வைத்தார்.

மேலும், அணைக்கட்டில் நிறுவப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் சிலையை திறந்து வைக்கிறார். பின்னர், திருப்பத்தூர் சென்று அங்கு அமைக்கப்பட்டுள்ள கலைஞர் சிலையையும் திறந்து வைத்தார். அதனைத் தொடர்ந்து, இன்றைய தினம் (26) ஜோலார்பேட்டை அருகே பொன்னேரியில் நடைபெறும் அரசு விழாவில் கலந்துகொண்டு, புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டும் முதலமைச்சர், முடிவுற்ற பணிகளை திறந்து வைக்கிறார். 25 ஆயிரம் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளையும் வழங்கவுள்ளார்.

இந்நிலையில், இந்நிகழ்வுகளில் கலந்து கொள்வதற்காக சென்னை சென்ட்ரலில் இருந்து காட்பாடிக்கு ரயில் மூலம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று புறப்பட்டுச் சென்றார்.

சென்ட்ரல் ரயில் நிலையத்தில் முதலமைச்சருக்கு தி.மு.க. நிர்வாகிகள், தொண்டர்கள், பொதுமக்கள் உள்ளிட்டோர் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

**காட்பாடி ரயில் நிலையத்தில் சிறப்பான வரவேற்பு!**



இதனைத் தொடர்ந்து காட்பாடி சென்றடைந்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு, அங்கும் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. கழக பொதுச் செயலாளர் - அமைச்சர் துரைமுருகன் அமைச்சர் ஆர். காந்தி, வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் கதிர் ஆனந்த், வேலூர் மத்திய மாவட்ட செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான நந்தகுமார், மேயர் சுஜாதா ஆனந்தகுமார், சட்டமன்ற உறுப்பினர்கள் ப.கார்த்திகேயன், ஈஸ்வரப்பன், அமலு விஜயன், துணைமேயர் சுனில்குமார், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் முகமது சகி உள்ளிட்டோர், புத்தகம், பூங்கொத்து, பொன்னாடை கொடுத்து முதலமைச்சரை வரவேற்றனர். இதனையடுத்து, காட்பாடி சித்தூர் சாலையில் இருபுறமும் மக்கள் வெள்ளத்தில் முதலமைச்சர் பயணம் மேற்கொண்டார். அப்போது, செண்டை மேளம், தாரை தப்பட்டை முழுங்க முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

**சாலையில் நடந்து சென்ற முதல்வர்**

வேலூரில் சாலையில் இறங்கி நடந்து சென்று பொதுமக்களின் உற்சாக வரவேற்பை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஏற்றுக் கொண்டார். அப்போது, முதலமைச்சரிடம் கைகுலுக்கியும், செல்ஃபி புகைப்படம் எடுத்துக் கொண்டும் பொதுமக்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

# தமிழ்நாட்டில் ‘மா’ விவசாயிகளின் நலனைப் பாதுகாத்திட நிரந்தரத் தீர்வு காணுவீர்!

## பிரதமர் நரேந்திர மோடிக்கு – முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்!

***சென்னை, ஜுன் 26-***

***தமிழ்நாட்டில் “மா” விவசாயிகளின் நலனைப் பாதுகாத்திட நிரந்தரத் தீர்வு காணும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளக்கோரி பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்.***

***அதன் விவரம் வருமாறு :-***

தமிழ்நாட்டில் நடப்பாண்டில் “மா” விளைச்சல் அதிகரித்து உள்ளதால், விவசாயிகளின் நலனைக் காத்திட போதிய சந்தைத் தேவையினை ஏற்படுத்திட உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டு, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்கு கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில், தமிழ்நாடு அரசு விவசாயிகளின் நலனுக்காக அக்கறையுடன் செயல்பட்டு வருகிறது என்றும், அதற்காக பல்வேறு நலத்திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறது என்பதை குறிப்பிட்டு, தமிழ்நாட்டில் சுமார் 1.46 இலட்சம் எக்டரில் ”மா” சாகுபடி செய்யப்பட்டு அதில் 9.49 இலட்சம் மெட்ரிக் டன் மாம்பழங்கள் உற்பத்தி அடையப்பட்டு பழப்பயிர் சாகுபடியில் தமிழ்நாடு “மா” உற்பத்தியில் பெரும் பங்கு வகிக்கிறது என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்த ஆண்டு “மா” மகசூல் அதிகரித்துள்ளதாலும், மாம்பழக்கூழ் தயாரிப்பு நிறுவனங்களின் கொள்முதல் குறைவால், மாம்பழ விலை கிலோவுக்கு ரூ.5க்கும் குறைவாக வீழ்ச்சியடைந்துள்ளது என்றும், இதனால் விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை மிகக் குறைந்த விலையில் விற்பனை செய்வது அல்லது மரத்திலேயே பழுக்க விட்டுவிடுவதை குறிப்பிட்டுள்ளார்.

மேலும், மாம்பழக்கூழ் தயாரிப்பு நிறுவனங்கள் பெரும்பாலும் தனியாரால் நடத்தப்படுவதாலும், தென் மாநிலங்களில் மாம்பழக்கூழ் அதிக அளவில் கிடைப்பதாலும், விவசாயிகள் நியாயமான விலையைப் பெற முடியவில்லை, அதனால் தமிழ்நாட்டிலிருந்து மாம்பழங்களை வழக்கமாக கொள்முதல் செய்யும் கர்நாடகா மற்றும் ஆந்திராவைச் சேர்ந்த வணிகர்களும் மாம்பழங்களை கொள்முதல் செய்வதைத் தவிர்த்துள்ளனர் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

மாங்கனி விலையில் சந்தை ஏற்ற இறக்கங்கள் இருந்தபோதிலும் “மா” விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள இந்த துயரத்தைப் போக்கிட அவர்களுக்கு நியாயமான இழப்பீடு வழங்குவது இத்தருணத்தில் மிகவும் அவசியம் என்பதால், இதில் ஒன்றிய அரசு தலையிட்டு, ஒன்றிய அரசின் சந்தைத் தலையீட்டுத் திட்டத்தில் (Market Intervention Scheme) தற்போது உள்ள மாங்கனி விற்பனை விலைக்கும் சந்தைத் தலையீட்டு விலைக்கும் (MIP) உள்ள வித்தியாசத்தை நேரடியாக விவசாயிகளுக்கு இழப்பீடாக வழங்க வேண்டும் என்றும், ”மா” விவசாயிகள் குறைந்தபட்சம் சாகுபடி செலவைப் பெறுவதை உறுதிசெய்யும் வகையில், நியாயமான விலையில் கொள்முதல் நடவடிக்கைகளைத் தொடங்க மத்திய கொள்முதல் நிறுவனங்களுக்கு அறிவுறுத்துமாறும் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதுமட்டுமின்றி, மாங்கனி வர்த்தகத்தில் ”மா” விவசாயிகள் மற்றும் மாம்பழக்கூழ் தயாரிப்பு நிறுவனங்களுக்கு இடையே நிலவும் அச்சத்தினை போக்கி இருதரப்பினருக்கும் நன்மை கிடைக்கும் வகையில் எடுக்கப்பட வேண்டிய இரண்டு முக்கியமான நடவடிக்கைகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

முதலாவதாக, மாம்பழச் சாற்றில் உள்ள பழக் கூழின் உள்ளடக்கம், இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையத்தின் (FSSAI) விதிமுறைகளைப் பின்பற்றாமல், குறைந்தபட்ச அளவு மாம்பழக் கூழ் இருக்க வேண்டும் என்பதை மாம்பழச்சாறு பானங்கள் தயாரிப்பு நிறுவனங்கள் தீர்மானிக்கின்றன. எனவே, பானங்களில் பழக் கூழைக் கலப்பதில் மாம்பழச்சாறு பானங்கள் தயாரிப்பு நிறுவனங்கள் FSSAI தரநிலைகளைப் பின்பற்றுவதை உறுதி செய்ய பொருத்தமான வழிமுறைகளை வெளியிடுமாறு இந்திய அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

இரண்டாவதாக, மாம்பழக்கூழுக்கான சரக்கு மற்றும் சேவை வரி 12 சதவீதமாக உள்ளதால் நிறுவனங்கள் அதிக அளவில் மாம்பழக்கூழ் தயாரித்திட ஆர்வமில்லாமல் உள்ளனர். எனவே, மாம்பழக் கூழுக்கான சரக்கு மற்றும் சேவை வரியை 12 சதவிகிதத்திலிருந்து 5 சதவிகிதமாக குறைக்க வேண்டும் என்றும், இது தற்போதைய துயரச் சூழ்நிலையைச் சமாளிக்க ஒரு குறிப்பிடத்தக்க படியாக மட்டுமல்லாமல், நமது விவசாயிகளுக்கு ஆதரவளிப்பதற்கான ஒரு நிரந்தர ஏற்பாடாகவும் இருக்கும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்நாட்டில் மட்டுமல்ல, மாம்பழம் உற்பத்தி செய்யும் அனைத்து மாநிலங்களிலும் உள்ள விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு, மேற்கண்ட பிரச்சினை களைத் தீர்க்க மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்கள் இதில் தலையிட்டு உரிய அறிவுறுத்தல் வழங்கிடுமாறு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் எழுதியுள்ள கடிதத்தில் கேட்டுக்கொண்டுள்ளார்.



கோயம்புத்தூர் மாநகராட்சி, மத்திய மண்டலம், காந்திபுரம் பேருந்து நிலைய வளாகத்தில், பிளாஸ்டிக் பாட்டில்கள் மற்றும் மறுசுழற்சி செய்யக்கூடிய கழிவுகளை பொது மக்களிடமிருந்து பெறும் வகையில் தன்னார்வலர்களின் சார்பில் தலா ரூ.20,000/ மதிப்பீட்டில் 50 இடங்களில் பாட்டில் வகை கழிவுகள் சேகரிப்பு தொட்டியினை பொது மக்கள் செயல்பாட்டிற்காக மாநகராட்சி ஆணையாளர் மா. சிவகுரு பிரபகரன், மத்திய மண்டல தலைவர் மீனா லோகு துவக்கி வைத்தனர்.

### தலைநகர் காத்த தமிழ்ச் செம்மல்

# ம.பொ.சிவஞானம் 120 ஆவது பிறந்த நாள் - திருவுருவச்சிலைக்கு மாலை!

## அமைச்சர் பெருமக்கள் மலர்தூவி மரியாதை செலுத்துகிறார்கள்!

*சென்னை, ஜுன் 26-*

*தமிழ்நாடு அரசின் சார்பில், ‘சிலம்புச் செல்வர்’ ம.பொ.சிவஞானம் அவர்களின் 120 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு, மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், 26.6.2025 இன்று காலை 9.30 மணியளவில் சென்னை, தியாகராய நகரில் அமைந்துள்ள அவரது திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்துகிறார்கள்.*

*‘சிலம்புச் செல்வர்’ ம.பொ.சிவஞானம் அவர்கள் சென்னை மயிலாப்பூரில் பொன்னுசாமி கிராமணியார் - சிவகாமி அம்மாள் தம்பதியினருக்கு 26.6.1906 அன்று மகனாகப் பிறந்தார். அவர் சிறுவயது முதல் தமிழ் மொழி மீது கொண்ட தீராப் பற்றின் காரணமாகச் சிறந்த தமிழ் அறிஞராகத் திகழ்ந்தார். தான் பெற்ற அனுபவத்தாலும், சுய முயற்சியாலும் தமிழில் தக்க புலமையோடு செந்தமிழ்ச் செல்வராகவும், சிறந்த தலைவராகவும் விளங்கினார்.*

*கிராமணி குலம், தமிழ் முரசு, தமிழன் குரல், செங்கோல் ஆகிய பத்திரிகைகளின் ஆசிரியராகவும் திகழ்ந்தார். சிலப்பதிகாரத்தை உலகறியச் செய்திட வேண்டும் என்கிற வேட்கையில், சிலப்பதிகார மாநாடுகள் பல நடத்தினார். சிலம்பின் மேல் இவர் கொண்டிருந்த காதலை அறிந்த சொல்லின் செல்வர் ரா.பி.சேதுப்பிள்ளை அவர்கள், நாகர்கோவிலில் நடந்த எழுத்தாளர் மாநாட்டில் ‘சிலம்புச் செல்வர்’ என்னும் பட்டத்தை ம.பொ.சிவஞானம் அவர்களுக்கு வழங்கினார்.*

*ம.பொ.சிவஞானம் அவர்கள் பத்திரிகை ஆசிரியர், பேச்சாளர் என்பதுடன் சிறந்த நூலாசிரியராகவும் திகழ்ந்தார். நூற்றுக்கும் மேலாக அவர் எழுதியுள்ள நூல்களில், கப்பலோட்டிய தமிழன், வீரபாண்டிய கட்டபொம்மன், தமிழன் குரல், வீரக் கண்ணகி ஆகிய நூல்கள் குறிப்பிடத்தக்கவை. இந்திய விடுதலைப் போராட்டம் குறித்தும், விடுதலைப் போரில் தமிழ்நாட்டின் பங்களிப்பினைத் தொகுத்தும் “விடுதலைப் போரில் தமிழகம்” என்கிற நூலை எழுதியுள்ளார்.*

*சுதந்திரப் போராட்டத்தில் ஆறு முறையும், தமிழ்நாட்டின் வடக்கு எல்லைப் போராட்டத்தில் இரண்டு முறையும் சிறையில் அடைக்கப்பட்டார்.*

*அன்றைய சென்னை மாகாணத்தில் இருந்து ஆந்திராவைப் பிரித்து, தனி ஆந்திர மாநிலம் அமைத்திட ஒன்றிய அரசு முடிவு செய்தது. அப்போது ‘மதராஸ் மனதே’ என்று ஆந்திரர்கள் சென்னைக்கு உரிமை கொண்டாடினர். ம.பொ.சி. அவர்கள் அதற்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்து “தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்” என்று வீரமுழக்கமிட்டார். அன்று அவர் எழுப்பிய வீர முழக்கம், தொடர்ந்து நடைபெற்ற போராட்டம் ஆகியவற்றின் பயனாக - மதராஸ் - சென்னை ஆந்திராவில் சேர்க்கப்படவில்லை. அதனால், ம.பொ.சி, ‘தலைநகர் காத்த தமிழ்ச் செம்மல்’ என அழைக்கப்பட்டார். அதே போல ம.பொ.சிவஞானம் அவர்களின் தீவிர வடஎல்லைப் போராட்டத்தின் காரணமாக திருத்தணி ஆந்திரர்களின் ஆளுகைக்குச் சென்று விடாமல் தமிழ்நாட்டுடன் இணைக்கப்பட்டது.*

*“மெட்ராஸ் ஸ்டேட்” என அழைக்கப்பட்டு வந்த சென்னை மாகாணத்திற்கு “தமிழ்நாடு” என்று பெயர் சூட்ட வேண்டும் என்றும் போராடினார்.*

*‘சிலம்புச் செல்வர்’ ம.பொ.சிவஞானம் அவர்கள் சட்டமன்ற மேலவை உறுப்பினராக, சட்டமன்ற மேலவைத் தலைவராகத் திறம்படப் பணியாற்றியதோடு, தமிழ் வளர்ச்சி உயர்நிலைக் குழுவின் தலைவராகவும் செயலாற்றியுள்ளார்.*

*1966ஆம் ஆண்டு ம.பொ.சிவஞானம் அவர்கள் எழுதிய “வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு” என்கிற நூலுக்கு ‘சாகித்ய அகாதமி விருது’ வழங்கப்பட்டதோடு, அன்னாரின் பொதுத்தொண்டினைப் பாராட்டி 1972ஆம் ஆண்டு ஒன்றிய அரசு பத்மஸ்ரீ விருதினையும் வழங்கிச் சிறப்பித்தது.*

*சிலம்புச் செல்வருக்குப் பெருமை சேர்க்கின்ற வகையில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அன்னாரின் நூற்றாண்டு விழாவைச் சிறப்புடன் கொண்டாடி, 2011 ஆம் ஆண்டு சென்னை, தியாகராய நகரில் தலைநகர் காத்த தமிழ்ச் செம்மல் ம.பொ.சிவஞானம் அவர்களின் திருவுருவச் சிலையைத் திறந்து வைத்தார்கள்.*

*ஆண்டுதோறும் தமிழ்நாடு அரசின் சார்பில் சிலம்புச் செல்வர் ம.பொ.சிவஞானம் அவர்களின் பிறந்த நாள் விழா ஜுன் மாதம் 26ஆம் நாள் அன்று மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.*

*அதன்படி, இன்று (26.6.2025) காலை 9.30 மணியளவில், ‘சிலம்புச் செல்வர்’ ம.பொ.சிவஞானம் அவர்களின் 120ஆவது பிறந்த நாளில், அவரது திருவுருவச்சிலைக்கு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மேயர், துணை மேயர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டு மாலையணிவித்து மலர்கள் தூவி மரியாதை செலுத்திச் சிறப்பிக்கிறார்கள்.*



விழுப்புரம் மாவட்டம் செஞ்சி அன்னை அஞ்சுகம் அம்மாள் புதிய பேருந்து நிலையத்திலிருந்து கட்டாங்கச்சிமேடு கிராமத்திற்கு புதிய பேருந்து சேவையை முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கொடியசைத்து தொடங்கி வைத்தார். உடன் ஒன்றிய பெருந்தலைவர்கள் செஞ்சி விஜயகுமார், வல்லம் அமுதா ரவிக்குமார் உள்ளனர்.